
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
14 NOV 2013

யா/மெய்கண்டான் மகா வித்தியாலயம்
கற்றல்வள நிலையம்

# தேடல்



ஆலய வழிபாட்டின் நோக்கம்

என் இனிய தோழியே

நன்னூல் குறிப்பிடும் நூல் குற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்

தேடல் - சஞ்சிகை

தேசிய வாசிப்பு மாதம் - 2013

**வெளியீடு**

யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், இளவாலை.

**போசகர்**

திரு.அ.இரங்கநாதன்

**இதழாசிரியர்**

திருமதி.ஜனகா சிவசுப்பிரமணியம்

**மலர்க்குழு**

திருமதி.வ.குமாரலிங்கம்

திருமதி.ப.சதீஸ்

திருமதி.S.ஜனகா

செல்வி.சு.சர்மிலா

**உள்ளே**


- தாய்
- அன்பு
- வாழ்க்கையும் கல்வியும்
- எமது பாடசாலை..
- வாசிப்பு
- பூந்தோட்டம்
- கல்வியின்....
- வாசிப்பின்....
- விடுகதைகள்
- ஆலய வழிபாட்டின்...
- நூலகமும் வாசிப்பும்
- கோபுரம்
- நூலகம்
- நகைச் சுவை
- விழாக்கள்
- நூல் அழகு
- ஆசிரியர் பற்றி..
- நன்னூல் குறிப்பிடும்...
- புத்தகங்களில்...
- வாசிப்பதனால்...
- வகுப்பறையில்...
- வாசகர்கள் பார்வையில்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>நோக்கக் கூற்று</u>

வாசிப்பினூடாக வளமான சமூகத்தை உருவாக்குவோம்.

<u>பணிக் கூற்று</u>

அறிவுப் பெருக்கத்திற்கேற்ப அறிவியல் நூல்களை அறிமுகம் செய்து ஒழுங்கில் முதன்மை பெறும் சமுதாயமாக எமது சமுதாயத்தை மாற்ற அர்ப்பணிப்புடன் செயற்படல்.

<u>மகுடவாக்கியம்</u>

நூல் பல கல்

<u>வாசிப்பு</u>

<u>மாதம்</u>

<u>ஒக்ரோபர் - 2013</u>

வெற்றியின்

இரகசியம்

கடின

உழைப்பும்

விடாமுயற்சியுமே

நீங்களும்

முயற்சி

செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் யாழ்ப்பாணம்.

## பாடசாலை அதிபரின் வாழ்த்துரை

தேசிய வாசிப்பு மாதத்தினை ஒட்டியதாக சஞ்சிகை ஒன்றினை உருவாக்கி வெளியிடுவதில் பங்களிப்பு நல்கும் நூலக ஆசிரியை மற்றும் ஆசிரியர்கள் மாணவச்செல்வங்கள் யாவர்க்கும் இது தொடர்பில் அவர்கட்கு பூரண ஆதரவினை வழங்குவதுடன் அவர்களது வாசிப்புச் செயற்பாட்டின் மூலம் "தேடல்" வலிமை பெற பாராட்டி வாழ்த்துகிறேன்.

அ.இரங்கநாதன்

அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

ஐ இரண்டு மாதங்கள்

எனை சுமந்தாய்

உன் கருவறையில்

அம்மா என்றழுது

உயிர் பெற்றேன்

இவ் வெளியுலகில்

நான் அழுதால் - நீ

துடிப்பாய்

நாவினிக்க பால்

தருவாய்

நான் தூங்க நீ

படிப்பாய்

நால் வகைத் தாலாட்டு

தூங்காது விழித்திருப்பாய் - எனை
துளி கூட மறவாதிருப்பாய்
சலிக்காது பார்த்திருப்பாய் - எனை
சாதிக்க வளர்த்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி சென்று நான் படிக்க
சொல்லி என்னை அரவணைத்து
அள்ளி முத்தம் நீ கொடுத்தால்
துள்ளி நானும் சென்றிடுவேன்

சீராட்டி என்னை வளர்ப்பாய்
பாராட்டி எனை அணைப்பாய்
பாசம் எனும் பாமாலை சூட்டிடுவாய்
பாரினிலே நான் உயர உழைத்திடுவாய்
என் ஆருயிர் தாயே

ச.எழில்சன்
A/L (2014)

**"கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

நிலையான அன்பிற்கு பிரிவில்லை

சொல்லாத சொல்லிற்கு அர்த்தமில்லை

தேடும் பாசத்திற்கு தொலைவில்லை

புரியாத அன்புக்கு அருகில் இருந்தும்

பயனில்லை

புரிந்து கொண்ட அன்பிற்கு பிரிவு

ஒரு தூரம் இல்லை

உண்மையான அன்பிற்கு என்றும்

மரணம் இல்லை

# என் இனிய தோழியே

உலகம் பெரிதென்பதால் தானே
பிரிவு வருகின்றது

வேண்டாமே இவ்வுலகம்
பூ மொட்டை திறப்போம்
பூவினுள்ளே வசிப்போம்
பூந்தேனை ருசிப்போம் நம் உயிர் நட்பை சுவாசிப்போம்.

ஜெ.ஜவன்யா A/L(2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் கல்வியும்

வாழ்க்கையானது கல்வியைச் சார்ந்து காணப்படுகின்றது. "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக" என்பது வள்ளுவர் வாக்கு முன்னைய காலத்தில் கல்வி இல்லாமலும் வாழமுடியும். இன்றைய நவீன காலகட்டத்தில் கல்வி இல்லாமல் ஒரு தொழில் வாய்ப்பில் பங்கு பற்றி வாழ்க்கையை நடத்த முடியாது. ஏனென்றால் கல்வியானது இன்றைய காலகட்டத்தில் மேலோங்கி காணப்படுகிறது. செல்வம் என்பது நிலையில்லாதது. கொள்ளை போக கூடியது. கல்வியை யாராலும் கொள்ளை அடிக்கவும் முடியாது. கல்வி எப்பொழுதும் நிலையானது. கல்வியானது மனதில் பதிந்து இருக்கும். செல்வமானது வீட்டில் நிறைந்து காணப்படும். கல்வி கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறப்படுகின்றது. கல்வியைப் பற்றி சில வார்த்தைகளை பல பெரியவர்கள் கூறுகின்றனர். அதில் கல்வியைப் பற்றி சிறந்த நல்ல கருத்துக்கள் கூறப்படுகின்றது. அந்தக் கருத்துக்கலில் ஒன்று **"கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான்"** கல்வியானது பல சந்தர்ப்பங்களில் பெற்றோர்களால் தடுக்கப்படுகின்றது. பல பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்பை இடைநிறுத்துகின்றனர். வறுமையின் காரணமாக பல பிள்ளைகள் கற்க முடிந்தும் பல தீய பழக்கவழக்கங்களால் கல்வியை கற்க மறுக்கின்றனர். சில பிள்ளைகள் படிக்கக் கூடியதாக இருந்தும் கூட வறுமையின் காரணமாக கல்வி கற்க முடியாமல் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

அண்மையில் இரு பிள்ளைகளின் பெற்றோர் கல்வி கற்பதைத் தடுத்ததனால் அருளி விதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைத்து உண்டதனால் கடுமையான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சில பிள்ளைகள் பல யுத்தங்களினால் பெற்றோரை பறி கொடுத்த பிள்ளைகள் வேலைக்கு சென்று அடிமைப்படுத்தப்படுகின்றனர். பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது. பெற்ற பிள்ளைகள் ஒரு சமயத்தில் தமது பெற்றோரை கைவிடுகின்றனர். ஆனால் அவர்கள் முந்திக்கற்ற கல்வி அவர்களைக் கைவிடாது. அவர்கள் கற்ற கல்வி மூலம்

தொழில் வாய்ப்புக்களைத் தேடலாம். அந்தத் தொழில் வாய்ப்புக்கள் மூலம் வாழ்க்கையைக் கொண்டு நடத்தலாம். இப்போதும் எங்கள் மதிப்புக்குரிய பெரியவர்கள் கல்வி கற்கும் காலத்தில் மின்சாரம் இல்லை, வசதியில்லை, அவர்கள் குப்பி விளக்கிலும் புத்தகங்களை இரவல் வாங்கியும் கல்வி கற்றனர். அதற்கு பின்னைய காலகட்டத்தில் வீதியில் ஒளிரும் மின் விளக்குகள் மூலம் கல்வி கற்றனர். அவ்வாறு கல்வி கற்றவர்கள் பலர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றனர். அவர்கள் கல்வி கற்றதனால் அவர்களது பிள்ளைகள் கல்வி கற்றனர். அதனால் அவர்கள் கல்வி கற்று பல புதிய கண்டுபிடிப்புக்களை நடத்தினர். அதனால் இப்போது நனோ தொழில் நுட்பம் நிறைந்த நாடாக காணப்படுகின்றது. அந்தவகையில் கல்வி கற்றால் மட்டும் தான் இன்றைய காலகட்டத்தில் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியும்.

மோ.தனுஜா
தரம் - 09B

"மௌனம் ஒரு அழகான மொழி.

சில சமயங்களில் அது பல வார்த்தைகளுக்கு மேல் பேசும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை நூலகம்

எமது பாடசாலையில் ஒரு குறித்த இடத்தில் அழகாக வர்ணங்கள் பூசப்பட்டு நூலகம் அமைந்துள்ளது. அந் நூலகத்தில் நாங்கள் தேடிவரும் நூல்களைவிட அதிகமாக நூல்கள் காணப்படுகின்றது. அந் நூலகத்தில் இருக்கும் ஆசிரியர் அந் நூலகத்தை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கின்றார். எங்கள் நேர சூசியில் எப்பொழுது நூலகப்பாடம் வரும் என காத்திருக்கிறார்கள். சகல மாணவர்களும் ஆசிரியர்களும் ஆசையாக நூலகத்திற்குச் செல்கிறார்கள். இந் நூலகத்திற்குள்ளே நுழைந்தால் திரும்பிப் போக முடியாத அளவில் எமது பாடசாலையில் அவ்வளவு அழகாக எல்லோர் மனதையும் கவரும் வண்ணம் நூலகம் அமைந்துள்ளது. வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்.

நூலகத்தில் உள்ள நூல்களை விட சிறந்த நண்பண் யாரும் இல்லை. நூல்களை வாசிப்பதால் வகுப்பறையில் பாட ஆசிரியர் வாசிக்கக் கூறும் போது நன்றாக வாசிக்க முடிகின்றது. நூல்களை வாசிக்க மறக்க வேண்டாம். எமது பாடசாலையில் அமைந்துள்ள நூலகம் எனக்கு மட்டும் உரியதல்ல. எல்லோர்க்கும் உரியது. சமுதாயமே உங்கள் பிள்ளைகளை ஒரு மணி நேரமாவது நூலகம் அனுப்புங்கள். அப் பிள்ளைகள் காலப் போக்கில் நல்ல பிரஜைகளாகவும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழுவார்கள். அப்பிள்ளைகளை அனுப்பி வையுங்கள் நாம் அமைதியான சூழலில் அதிகமான புத்தகங்களை வசதியான ஒரே ஒரு இடத்தில் மட்டுமே நாம் ஆறுதலாகவும் அமைதியாகவும் வாசிக்கலாம். ஒரு தடைவ இந் நூலகத்திற்கு வாருங்கள் ஒவ்வொரு தடவையும் வரத்தூண்டும். எமது பாடசாலையின் நூலகத்தில் உங்களுடைய எண்ணங்களைப் பதித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுங்கள்.எமது பாடசாலை நூலகத்தில் பல பழைய மாணவர்கள் நிறைய அன்பளிப்புக்களைச் செய்துள்ளனர்.

எமது பாடசாலை நூலகத்தில் சிறுவர் மலர் என்னும் நூல்கள் இருநூறுக்கு மேற்பட்டு காணப்படுகின்றது. ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றது.

எமது நூலகத்தில் பல நூல்களைக் கற்று தீய வார்த்தைகள் சொல்லாமல் தீய குணங்களைவிட்டு நீங்கி நூல்களை வாசித்தால் உலகிலே நடமாடும் நூலகமாகவே மாறிவிடுவர். வீடு கட்டும் போது படுக்கை அறை,சமையல் அறை,பூசை அறை கட்டுவது போன்று வாசிப்பதற்காக ஒரு இடத்தை ஒதுக்க வேண்டும். எமது பாடசாலை நூலகம் பாடசாலை மாணவர்களுக்கேற்ற வகையில் அமைக்கப் பட்டிருப்பதோடு வாசிப்பைத் தூண்டும் வகையில் கவர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் மாணவர்களாகிய நாம் எமது பாடசாலை நூலகத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி பயன் பெறுவதோடு எம்மை நூலகத்திற்குச் சென்று அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டிய அனைவருக்கும் மாணவர்கள் சார்பில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

கு.கலைமகள்

தரம் - 09B

அறியாமையுடன்
நூறு நாள்
வாழ்வதைவிட
அறிவுடன் ஒரு நாள்
வாழ்வதே மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு

ஒரு நாள் வந்து உலகம் சிரித்தது
மறுநாள் வந்து உலகம் வியந்தது
மனிதன் வந்தான் மூச்சை அறிந்தான்
அம்மூச்சு சொன்னது வாசிப்பென்று

மிருகத்தின் உயிர் சுவாசிப்பு
மனிதனின் உயிர் வாசிப்பு
வாசிப்பை நீ நேசித்தால்
உலகம் உன்னை சுவாசிக்கும்

வாசிப்பு இருந்தால் நீ முழுமனிதன் - அது
இல்லாவிட்டால் நீ அரை மனிதன்
வாசிப்பை உன் உயிர் மூச்சாக்கு
உன் எதிர் காலத்தை நீ வளமாக்கு

சி.சோபன்ராஜ்

A/L (2015)

உண்மை பேசி உத்தமனாக
வாழ் உண்மையே அழகு
அழகே உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்தோட்டம்

அழகின் இருப்பிடம் எதுவம்மா?
அன்பின் அன்னையை நான் கேட்டேன்
பழகு தமிழில் அவர் சொன்னார்
பூந்தோட்டம் தானென்று

சிவப்பு வெள்ளை றோஜாவும்
செம்பருத்தி மல்லிகையும்
குவளை மலரும் குங்குமமும்
காண்பவர் மனதை கவர்ந்திடுமே

ரயிலில் ஏறி உறவினர்கள்
பயணம் புறப்படும் வேளையிலே
கரத்தால் விடை கொடுப்பது போல
கழுத்தசைக்கும் பூ மரங்கள்

கோ.டிலக்சன்
A/I (2015)

✪ மொழியையும் மொழியின் மூலமாக
அறிவுக்களஞ்சியத்தைபிள்ளைகளுக்கு
ஊடுகடத்துவதே பாடசாலையின் பொறுப்பாகும்.
ஜோன்டுயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் அவசியம்

“இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்ற முதுமொழிக்கிணங்க நாம் இளமைப் பருவத்திலே கல்வி கற்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விற்கும் அவசியமாக கல்வி விளங்குகிறது. கல்வியானது நெருப்பினால் வேகாது திருடர்களால் கொள்ளையிடவும் முடியாது. ஒருவனுக்கு கல்வி கொடுக்க கொடுக்க கூடுமே ஒளிய குறையாது என்று கூறப்படுகிறது.

அடுத்து ஔவைப்பிராட்டியார் “ கற்றறிந்தார் கண்ட அடக்கம்…………..” என்னும் பாடலில் ஒருவனுடைய வாழ்விற்கு கல்வியின் அவசியத்தை அழகாக கூறியுள்ளார். மன்னனுக்கு தன் தேசமெல்லாம் சிறப்பு உண்டு ஆனால் கற்றறிந்தவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்றறிந்தவர்கள் தம்மை புகழ்ந்து பேசார் கற்றறியாதவர்கள் தம்மை புகழ்ந்து பேசுவார்கள் என்று அழகாக கூறியுள்ளார். கல்வியானது எமது வாழ்விற்கு மிகவும் அவசியமாகும். கல்வியானது எமது உடலை விட்டு நீங்கினாலும் அடுத்த பிறவியில் தொடரக் கூடிய ஒன்றாகக் காணப்படுகிறது.

நாம் எமது வாழ்க்கையில் கற்றலுக்கு ஏற்ற வகையில் பாடசாலையில் கல்வி பயில்கின்றோம். மற்றும் நூலகங்களில் எவ்வளவோ நல்ல நூல்களையெல்லாம் கற்று பயன் பெறலாம். ஆனால் நாம் தொலைக்காட்சிகளில் படங்களைப் பார்க்கிறோம். மற்றும் சூதாட்டம் போன்ற தீய வழிகளில் செல்லப் பார்க்கிறோம். அதை விடுத்து நாம் எமக்கு அறிவினை ஊட்டக் கூடிய நூல்களை வாசித்தல் வேண்டும். அதை விடுத்து நாம் எமது வாழ்க்கையை வீணாக்கல் தவறான ஒன்றாகக் காணப்படுகின்றது. முன்னைய காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் கல்வி கற்பது குறைவாகவே காணப்பட்டது. ஆனால் அதை விடுத்து ஔவையார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் போன்றோர் கல்வியில் சிறந்த பெண்மணிகளாக விளங்கினர். ஔவையார் நாலடியார், வாக்குண்டாம், கொன்றைவேந்தன் போன்ற பாடல்களில் கல்வியின் அவசியத்தை விளக்கியுள்ளார்.

அடுத்து கல்வியில் முயற்சித்து பெரும் அறிஞராக அக்பரும் காணப்பட்டார். அக்பருக்கு எழுத படிக்கத்தெரியாது. ஆனாலும் நூல்கள் படிக்கச் சொல்லி அதைக் கேட்டு அறிந்து பெரிய அறிஞரானார். எமக்கு ஒரு நல்ல நண்பர்களைவிட கல்வியே சிறந்த ஒன்றாக காணப்படுகிறது. கல்வியைவிட எமக்கு வேறு சொந்தம் எதுவுமில்லை.கவலைகளை நாம் எமது வாழ்க்கையில் மறக்க கல்வியைக் கற்றால் மனம் நிம்மதி அடைகிறது. எமது வாழ்விற்கு அல்லது ஒருவனுக்கு கண் இரண்டும் இருந்தால் எவ்வளவு பயனோ அதுபோலவே ஒருவனுடைய வாழ்விற்கு கல்வி அவசியமாகக் காணப்படுகிறது. கண் இல்லை என்றால் எமக்கு எவ்வளவு வேதனையைத் தருகின்றதோ அது போலவே கல்வி இல்லை என்றால் எமது வாழ்க்கையே மூடப்படுகின்றது போல் காணப்படுகின்றது.

பொய்யாமொழிப் புலவர் கல்வியானது மக்களிற்கும் விலங்குகளிற்கும் உள்ள வேறுபாட்டை கவியாகவும் காவியமாகவும் வடித்துள்ளார். “ விலங்கொடு மக்கள் அனையர் இலங்கொடு கல்லாதவர் ஏனையர்” என்று அழகாகக் கல்வியைப் பற்றிக் கூறியுள்ளார். செல்வங்களுள் சிறந்த செல்வமாக கல்விச் செல்வமே காணப்படுகின்றது. ஒருவனுக்கு எவ்வளவு செல்வம் இருந்தாலும் கல்வி இல்லாத இடத்து அவன் ஏழையாகவே காணப்படுகிறான் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதகாலத்து மகரிசிகளும் கல்வியைக் கற்றுப் பயன் பெற்றார்கள். கல்வியைக் கற்பதற்கு குருவிடம் செல்லலாம் அல்லது முதியவர்களிடம் சென்றும் கல்வியைக் கற்கலாம். முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதற்கிணங்க நாம் பொழுதுபோக்காக நூல்களை வாசித்தால் அது நாளடைவில் எமது மனதில் பதிந்து நூல்களை வாசிக்கும் ஆர்வம் பிறக்கும். இதன் மூலமே நாம் கல்வியைத் தொடர்ந்து கற்கலாம்.

ஒருவன் கல்வி கற்று சிறந்த அறிஞனாகும் போது ஒரு நூலகம் அவனது வாழ்க்கையில் திறக்கிறது. கல்வி கற்பதற்கு ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் தேவையில்லை நாம் எமது வாழ்க்கையில் முன்னோக்கி செல்ல வேண்டுமேயானால் முயற்சித்தல் வேண்டும். தோல்வி என்பதும் ஒரு வெற்றிதான் நாம் ஒரு ஏணியில் ஏறும் போது விழுந்தால் நின்று விடக் கூடாது. திரும்ப திரும்ப முயற்சித்து ஏறவேண்டும். அதுபோலவே நாம் கல்வி கற்கும் போதும் விளங்கவில்லை என்றால் எமது வாழ்க்கையே விளங்காமல் போய்விடும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் திரும்ப திரும்ப முயற்சித்துகல்வி கற்க வேண்டும். இதற்கு ஓர் உதாரணமாக அத்திவாரம் சரியாகப் போட்டால் தான் கட்டடம் ஒழுங்காக கட்ட முடியும். அத்திவாரம் சரியாகப் போடாவிட்டால் கட்டடம் உடைந்து கீழே விழும். ஆகவே நாம் எமது வாழ்க்கையில் கல்வியை அத்திவாரம் போல் நல்ல தெளிவாகக் கற்றால் கட்டடம் போல் உயர்ந்து வாழ முடியும். நாம் வாழ்க்கையை வீணடிக்காது கல்வி கற்று வாழ்வோமாக.

நா.பவிசா
A/L (2015)

அன்பு அனைத்தையும்
பொறுத்துக் கொள்ளும்,
அனைத்தையும் நம்பும்,

அனைத்தையும் எதிர்நோக்கி
இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பின் பயன்கள்

வாசிப்புப் பழக்கம் இன்று மாணவர்களிடையே அருகிவருகின்றது. தொலைக்காட்சி பார்ப்பதிலேயே அதிக நேரத்தை செலவிடுகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் கிரிக்கெட் போட்டிகளையும் திரைப்படங்களையும் பார்ப்பதற்காக பாடசாலைக்கே செல்லாது நின்றுவிடுகின்றனர். இதனால் அவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. கற்கவேண்டிய நேரம் வீண்விரயமாகின்றது. இதன் பேறாக அவர்களது கல்வித்தரமே குன்றுகின்றது. மாணவர்கள் தமது பொழுதுபோக்காகத் தொலைக்காட்சியையே நம்பியுள்ளனர். மிக அருமையாகவே ஒரு சில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்பிற்குச் செலவிடும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது.

" நூல் பல கல் " என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவிற்கு நமது அறிவு பெருகும். " கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் " என்பது எமது ஆன்றோர் வாக்கு. ரஸ்கின் என்ற ஆங்கில அறிஞர் "புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" என்கிறார். வேறு செல்வங்களைக் கள்வர்கள் களவாடிச்சென்றுவிடலாம். ஆனால் புத்தகங்கள் பொதுவாகக் களவாடப்படுவதில்லை. வாசிப்புப் பழக்கம் இல்லாதவரின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும்.

வாசிப்பு மனிதனின் அறிவைப் பெருக்க உதவுகின்றது. அறிவைப் பெருக்க நூல்களை வாசித்தல் அவசியமானதாகும். நூல்களை வாசிக்கும் பொழுது நல்ல நூல்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத்து படித்தல் வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பிய மனநிறைவு கிடைக்கும். அறிவைப்பெருக்கி சந்தோசமாக வாழவைப்பவை நூல்களே ஆகும். "கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" ஊணக்கண்ணிலும் பார்க்க ஞானக்கண்ணே சிறந்தது. என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்துகின்றது. வாசிப்புப் பழக்கத்தை இளமையிலேயே பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்போது தான் நம் அறிவு பெருகும்.

வாழ்வில் கழிப்போ சோர்வோ ஏற்படும் போதெல்லாம் நூல்களை வாசிக்கும் பொழுது அவற்றைப் போக்கிக் கொள்ளமுடியும். கவலைகளை மறக்க நூல்களைப் படி மனம் நிம்மதி அடையும். எமக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டிருக்கும் பொழுது பல நண்பர்கள் எனக் கருத்தத் தகும் நூல்களை வாசிக்கும் பொழுது எம் மனதில் இருக்கும் இன்னல்கள் காற்றோடு பறந்தோடி எமக்கு அறிவைப் பெருக்கவும் சந்தோசமாய் வாழவும் உதவிபுரிகின்றது.

ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன. நூலகம் நமக்கு ஏன் திறக்கப்படுகினறது என்றால் நாம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் சிறந்ததொரு வாழ்க்கையை வாழ்வதற்கும் திறக்கப்படுகின்றது. நூலகத்தில் எமது அறிவுப் பசியை போக்கிக் கொள்வதற்கு இனிய கனிகள் காணப்படுகின்றன. நாம் அவற்றை வாசிக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான் என்று சொல்லுவார்கள். நாம் கற்க மறுக்காமல் வாழ்க்கையையும் மறுக்காமல் வாழவேண்டும்.

"தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தற்கு கற்றனைத் தூறும் அறிவு" மணலில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அது போல் மக்களுக்கு கற்ற கல்விக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கபடி அறிவு ஊறும். நாமும் இக்குறளின் படி ஒழுக வேண்டும்.

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது என்றார் அறிஞர் பேர்க்கன். வாசிப்பு மனிதனின் வாழ்க்கைக்கு ஊன்று கோலாக அமைகின்றது. ஒருவன் வாசிப்பதால் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப் பறித்துவிட முடியாது. நாமும் வேறொருவன் வாசிப்பதால் பெற்ற இன்பங்களைப் போல் நிறைய நல்ல நூல்களை வாசித்து சிறந்த அறிவைப் பெறவேண்டும்.

அக்பருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. ஆனாலும் நூல்களைப் படிக்கச் சொல்லி அதைக் கேட்டு அறிந்து பெரிய அறிஞனாக உருவாகினார். நாமும் அக்பரைப் போன்று எழுதப்படிக்கத் தெரியாது. ஆனாலும் நூல்களைப் படித்து வாசிக்கப் பழகி இவ்வுலகிலே சிறந்ததொரு அறிவு மேதையாக திகழ்வோமாக.

"நூல் பல கற்போம் நுண்ணறிவு பெறுவோம்"

தி.சதுர்சனா
தரம் - 08 A

## இல்லாத செய்திகள்

- ✓ நண்டுக்குத் தலை இல்லை
- ✓ சுண்டெலிக்கு வியர்வை இல்லை
- ✓ தவளைக்கு கழுத்து இல்லை
- ✓ விலங்குக்கு பகுத்தறிவு இல்லை
- ✓ பாம்புக்கு கண்களில் இமை இல்லை
- ✓ சந்திரனில் வாயு மண்டபம் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

1. போட்டது போட்டது தான் எடுக்க முடியாது ஆனால் இரசிக்க முடியும் அது என்ன?
2. பாடிப் பாடியே வலம் வருவார் பாகவதர் அல்ல தேடிவந்து ஊசிபோடுவார் டாக்டரும் அல்ல அது யார்?
3. வாலால் ஊசி போட்டு காலால் ஓடவைப்பார் அவர் யார்?
4. நின்றது நின்றபடி நிலையாக நிற்பான் மாலைகள் சுமந்தபடி அவன் யார்?
5. தட்டும் திண்பான் புட்டும் திண்பான் தண்ணீர் பட்டால் மட்டும் செத்துப் போவான் அவன் யார்?
6. காட்டுக்குள்ளே கறுப்பர்கள் ஒழிந்திருப்பார்கள் அவர்கள் யார்?
7. குள்ள அக்காள் வெள்ளை நிறத்தாள் கூடைக்கந்தை அணிந்திருப்பாள் அவள் யார்?
8. அவன் சிரித்ததை அவனுக்கே காட்டினேன் நான் யார்?

**1. கோலம் 2. நுளம்பு 3. தேள் 4. சிலை**

**5. நெருப்பு 6. தலைமுடி,பேன் 7. வாத்து 8. கண்ணாடி**

ஸ்ரீ.புவிதரன்
தரம் - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டின் நோக்கம்

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. கோயில்களின் ஆட்சியினால் தான் எமது வாழ்வே மேம்படும், இரட்சிக்கப்படும் என்பது எமது நம்பிக்கை. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பதற்கிணங்க நாமும் இறைவன் சாந்தித்தியத்தைப் பெறுவதற்கு நாம் வாழும் ஊர்களிலே கோயில்களை அமைத்து ஆராத்தி, அபிசேகம், பூசை என்ற ஒழுங்குகளோடு இறைவனை அங்கு நிலைகொள்ளச் செய்து பூஜித்து வணங்குகின்றோம்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எமது அன்றாட கடமைகளில் மிக முக்கியமானது இறைவணக்கத்தை மேற்கொள்ளல் ஆகும். நாம் வீடுகளில் இறைவனை வழிபட்டாலும் ஆலயங்களுக்கும் சென்று வழிபாடு செய்வது சிறப்பானதாகும்.

ஆலயங்கள் ஆகமமுறைப்படி அமைக்கப் பெறுவன. ஆலயத்தில் அடிக்கல் நாட்டும் போது தொடக்கம் இன்றைய பூஜை விழாக்கள் உற்சவங்கள் யாவுமே இறைவனின் சாந்தித்தியத்தை மையப்படுத்தி தூய்மையான பக்திப் பயப்பாட்டுடன் சாஸ்திரோக்தமாக நிகழ்த்தப் பெறுவன. மந்திர உச்சாடனங்களினாலும், அபிடேக ஆராதனைகளாலும் ஆன்மீக ஊற்றுக்கள் ஸ்திரப்படுத்தப் படுகின்றன. உயிர்ப்பும் உணர்வும் சக்தியும் ஆற்றலும் மிக்க தெய்வீக மந்திரங்கள் பற்பல தடவைகள் உச்சாடனம் செய்யப் பெற்று உயிரூட்டப் பட்டுள்ளன. சாஸ்திரவிதி ஒழுங்குகளின்படி தீப தூபங்கள், மலர்மாலைகள், சோடோபசாரங்கள் யாவும் நிகழ்த்தி இறைவனின் சக்தி அலைகள் பரவவிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களுடைய சிவசின்னங்கள் விபூதி, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து என்பனவாகும். தூலலிங்கமான கோபுரம், வீதிகளின் சுற்றுப் பிரகாரம் அதற்கேற்ற மூர்த்திகள், கொடித்தம்பம், பலிபீடம், கற்பக் கிரகம், வசந்தமண்டபம், யாகம் என்பனவும் ஒழுங்காகவும் கச்சிதமாகவும் அவற்றிற்கான சுத்தியோடும் இலட்சணங்களோடும் அமைந்திருக்கும். இவற்றை நாம் பார்த்து பரவசிக்கவும் பக்தி செலுத்தவும் எமது மனதை இறைவனில் பதியவைக்கவும் இலகுவாகின்றது.

மேள, தாள வாத்தியங்கள் முழங்க காண்டாமணி, கைமணி ஒலிக்க தூப தீபவாசனைகள் ஒளிமிளிர நடைபெறும் அபிசேகம், ஆராதனை, பூஜை என்பவற்றை கண்டுகளிக்க உடம்பெல்லாம் பரவசநிலை அடையும். "தனிமனிதன் தன்னை தனக்குரிய அனுஸ்டானத்தால் சுத்தப்படுத்திக் கொண்டு தன் வாழ்க்கை உதாரணத்தாலேயே மற்றவர்களுக்கும் வழிகாட்டுவது இந்துமதத்தின் உயிர் நிலை" என்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திரசுவாமிகள் கூறியுள்ளார்.

தன்னையும் தன் சுற்றாடலையும் மறந்த இறைபக்தியினால் ஈர்க்கப்படும் தன்மையை ஆலயங்கள், அதன் சுற்றாடல், நிர்வாகம், அமைப்பு, பூஜைகள் என்பன ஏற்படுத்துகின்றன. பண்டைய காலந்தொட்டு இன்றுவரை மக்களுடைய துயர் தீர்க்கும் மருந்து இறைபக்தி ஒன்றேதான். கடவுள் மீது வைக்கும் பக்தி ஒன்றினால் தான் நாம் கரைகடந்த இன்னல்களைப் போக்குவதோடு சகிக்கும் தன்மையையும் கைக்கொள்ள முடியும். அத்தகைய பொறுமை, சகிப்புத் தன்மை, ஆகியவற்றை நம் மனதில் தோன்றச் செய்வது இந்து ஆலயங்களே.

ஆலயங்கள் அறப்பணிகளோடு அரும் கலைகளையும் வளர்த்து மக்கள் மனதில் நல்லெண்ணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியடையச் செய்கின்றன. “நாம் இம் மானிடப் பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்” என ஐந்தாம் குரவரான ஆறுமுகநாவலர் கூறியுள்ளார். “தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை” என்பது பழமொழி குழந்தைகள் இளம்பிஞ்சுகளாக எதையும் ஏற்றுக் கொள்ளும் குருத்துக்களாக இருக்கும் போதே அவர்களது மனதில் சிறந்த பண்புகளையும் ஆண்டவனை அன்போடு வழிபடும் பழக்கத்தை வளர்த்துவிடவேண்டும்.

வெள்ளி, செவ்வாய், பூரணை, அமாவாசை, சிவராத்திரி, ஆடிப்பூரம், திருவிழாக்காலங்கள் என விசேடமாக குறிப்பிடப்படும் நாட்களிலும் கும்பாபிசேகம், குடமுழுக்கு உற்சவகாலங்களிலும் தான் ஆலயவழிபாடு அவசியம் என்பதல்ல. இறைவன் படைத்த எல்லா நாட்களுமே அவனை வழிபட உவப்பான நாட்களாகும். இறைவழிபாட்டிற்கு குறிப்பிட்ட நேரம் என்ற கட்டுப்பாடில்லை.

ஆலய வழிபாட்டிற்கு செல்லும் போது வெறும் கையோடு போகாமல்பூக்கள், பழம், பாக்கு, வெற்றிலை, அபிசேகத்திற்கு வேண்டிய இளநீர், பால், தயிர், நெய், போன்ற எம்மால் இயன்ற பொருட்களை கொண்டு செல்லல் சிறந்தது.

சைவசமயம் என்பது வாழ்வின் நடைமுறை எனவே எமது சமயச்சிந்தனைகளில் மேம்பட்டிருக்கும் ஆலய வழிபாடு எமது அன்றாட வாழ்வில் மிகவும் அவசியமானது.

உசாத்துணை நூல்கள் - கொழும்பு மகளிர் இந்து மன்றம்.

திருமதி.பகீரதி சதீஸ்
ஆசிரியர்

# நூலகமும் வாசிப்பும்

இன்றைய தகவல் யுகத்தில் மாணவனுக்கான அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகத் தகவலும் கருதப்படுகின்றது. தகவல் பெருக்கம் மற்றும் தகவல் வெடிப்பின் காரணமாக பல்வேறு இடங்களில் சிதறிக் காணப்படும்தகவல் சாதனங்களிலிருந்து வாசகர் ஒருவர் தமக்குத் தேவையான தகவல் அனைத்தையும் தேடிப் பெற்றுக் கொள்வது கடினமானதாக உள்ளது. தகவல் தேடலுக்கான விரைவானதும் சுலபமானதுமான அணுகுமுறைகள் பல்வேறு அறிவுசார் துறைகளின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. மாணவன் ஒருவனின் தேடலை பூர்த்தி செய்யக் கூடிய பொருத்தமான தகவலை இலகுவாக அடையாளம் கண்டு விரைவாக பெற்றுக் கொள்வதற்கு பாடசாலை நூலகங்கள் பெரிதும் உதவுகின்றன.

தகவலை அறிந்து கொள்வது என்பது மனிதன் ஒவ்வொருவரதும் உரிமையாகும். தற்போது தகவலைப் பெறுவதற்கு பல்வேறு வழிமுறைகள் உள்ளன. எனினும் இது தொடர்பில் நூலகங்களில் கணிசமான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. நூலகங்கள் பொதுவாக மூன்று வகைப்படும்.

1. பொது நூலகங்கள்
2. கல்வி நிறுவன நூலகங்கள்
3. சிறப்பு நூலகங்கள்

கல்வி நிறுவன நூலகங்களுள் பாடசாலை நூலகங்களும் அடங்குகின்றன. பாடசாலை நூலகங்கள் மாணவர்களின் தேடலுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களின் கற்பித்தலுக்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரமாக இருப்பது பாடசாலை நூலகமே. புாடசாலை நூலகம் அப்பாடசாலையின் கல்வித்

பொது நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தோடு இணைந்து ஆதரவளிக்கும் அங்கமாக இயங்கும் போது அது கல்வித் துறையில் அதி உன்னத நிலையை அடைவதற்கு அடித்தளமாக அமைந்து விடுகின்றது.

பாடசாலை நூலகங்கள் மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டி ஆசிரியர்களின் தலையீடு இன்றி சுயமாக வாசிப்பதுடன் தமக்குத் தேவையான தகவல்களைத் தாமே தேடிப்பெற்றுக் கொள்ளச் செய்யவேண்டும். மாணவர்களின் கல்வித் தரத்திற்கும் அறிவாற்றலுக்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் நூல்களைக் கொடுப்பதுடன் பாடவிதானத்திற்கும் பரீட்சைக்கும் ஏற்றதான அறிவேடுகளை வழங்குவதுடன் மாணவன் தான் வாழும் சமூகத்திற்கும் எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய அறிவுத்திறனை வளர்த்தெடுப்பதும் பாடசாலை நூலகங்களின் செயற்பாடாக அமைகின்றது.

வாசிப்பில் திணிப்பு என்பது சஞ்சலத்தை ஏற்படுத்தக் கூடியது. திணிப்பு அற்று சுயமாகவே விரும்பி வாசிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்துவது மாணவர்களுக்கே. நூல்களையும் நூலகத்தில் பேணவேண்டும். நூலகவியலின் தந்தையான S.R.இரங்கநாதனின் பஞ்சசீலக் கொள்கையான,

1. நூல்கள் பாவனைக்கே
2. நூலுக்கேற்ற வாசகர்
3. வாசகருக்கேற்ற நூல்
4. வாசகர் நேரம் பேணுக
5. நூலகம் வளரும் ஓர் உயிரி

என்னும் விதிக்கமைய ஒரு நூலகம் இயங்குமேயானால் பாடசாலை நூலகம் மட்டுமல்ல அனைத்து நூலகங்களுமே தனது குறிக்கோளை விரைவில் அடைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நூலகங்கள் மட்டுமன்றி ஒவ்வொரு மாணவர்களின் வீட்டிலும் நூல்களை வாங்கிச் சேமித்து படிக்கும் பண்பை மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். நல்ல நூலுக்குச் செய்யும் செலவானது ஒரு நல்ல முதலீடு என்பதை நன்கு உணர்ந்தாலும் பற்றாக் குறையான குடும்ப வரவு, செலவுகளால் நூல்களை வாங்க பல தடவைகள் யோசிக்கின்ற நிலை அண்மைக் காலத்தில் உருவாகியுள்ளது எனினும் நூல்களை நேசித்து வீட்டில் பாதுகாக்கும் தன்மையை எல்லோரும் உருவாக்க வேண்டும்.

நூலகங்கள் நூல்களின் சேமிப்பிடம் என்ற கருத்து நிலை மாறி தகவல் தொழில் நுட்பயுகத்திற்கேற்ப தகவல் மையங்களாக மாறிவருகின்ற இன்றைய நிலையும் தினமும் தகவல் பெருகும் வளங்கள் யாவற்றையும் பெற்றுக் கொள்வதுடன் தகவல் தேடி வருபவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நூலகங்கள் முயலவேண்டும்.

"நூலகம் செல்வது சாலவும் நன்று"

சைவப்புலவர்/சைவசித்தாந்தபண்டிதர்
திருமதி.ஜனகா சிவசுப்பிரமணியம்
BA(HONS) Tamil /Dip in Edu (Merit)
MA in Tamil

## இருக்கவேண்டியவை ஐந்து

1. சுவையான உணவு படைக்க
   அன்புத் தாய்
2. ஒழுக்கமுள்ள நல்ல நடத்தைக்கு
   நல்ல நண்பர்கள்
3. நல்ல அறிவு வளர நல்ல
   ஆசான்
4. இனிமையான இல்வாழ்விற்கு இங்கிதமான
   மனைவி
5. தூய சிந்தனைக்கு தெய்வபக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரம்

சின்னஞ் சிறிய கோபுரம்
சிற்பி செய்யாக் கோபுரம்
என்னைப் போன்று மூன்றடி
இருக்கும் அந்தக் கோபுரம்
சின்னஞ் சிறிய கோபுரம்
செங்கல் நிறத்துக் கோபுரம்
மண்ணால் ஆன கோபுரம்
மனிதன் நுழையாக் கோபுரம்
அருமையான கோபுரம்
யார் அமைத்த கோபுரம்
கறையான் ஒன்று கூடியே
கட்டிவைத்த கோபுரம்

கி.கிரிசாந்
தரம் - 06

**"காலமெனும் ஆழ்கடலில் நீந்துகின்றவனுக்குஅறிவுஎன்னும் துறைமுகத்தைஅடையகலங்கரைவிளக்காகஅமைவதுசிறந்த நூலகமே"**

**- கவிதாகூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம்

பாடசாலையில் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய பாடத்திட்டத்திற்கு உறுதுணையாகவும் வினாக்களுக்கு விடையளிக்கும் ஆசானாவாகவும் பாடசாலையில் உள்ள நூலகங்களே மிளிர்கின்றன. என்றால் மிகையாகா அவ்வப்போது பாடசாலை நூலகத்திற்குவரும் புதிதானதும் பொருத்தமானதுமான பயன் தரும் நூல்களைப் பற்றி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தெரியப்படுத்துவது நூலகரின் பொறுப்பாகும். இப் பொறுப்பை திறம்படசெயலாற்றுபவர் எமதுபாடசாலை நூலகர்.

நூலகம் சிறப்புற செயல்படவிழிப்புணர்வுடன் செயலாற்றும் நிர்வாகம் வேகமும் உத்வேகமும் உதவும் குணமும் கொண்ட நூலகர். ஈடுபாடும் திறந்த மனமும் கொண்ட ஆசிரியர் குழாம் துடிதுடிப்பும் ஆர்வமும் கொண்ட மாணவர் குழாம் என்பன அத்தியவசியமானவை. இவை அனைத்தும் ஒருங்கிணைந்த இசையைப் போல ஒருகுழுவாகச் செயற்பட்டு எமது பாடசாலையில் சிறந்த நூலக அமைப்பு உருவாகியுள்ளது. நூலகர் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களை நூலக நேரத்தின் போது சந்தித்து அவர்களுக்கு உரிய நூல்களை காட்சிப்படுத்தி மாணவர்களின் வாசிப்புத்திறன் கிரகிக்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்தி வருகின்றார்.

ஆரம்பக்கட்டமாகச் சிறுவர்கள் சிறுகதைகளை வாசித்து ஊக்கப்படுத்தினால் தான் பாடசாலைக்காலம் முடியும் போது அவர்களால் பெரும் கதைகள் கொண்ட புத்தகங்களை படிப்பதற்கு படிப்படியாக அழைத்துச் செல்ல முடியும். சிறுவர் பகுதி வாசிக்கும் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகலாவியரீதியில் இலக்கமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட நூல்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் காட்சிப் படுத்தப்பட்ட உலகப்புகழ் பெற்றபெரியோர்களின்

பொன்மொழிகள் மரஅமைப்பில் வடிவமைக்கப்பட்ட நிறநிறமானபொது அறிவு வினாவிடைகள் தொகுத்துகாட்சிப்படுத்தப்பட்டுள்ள நூல்களின் பெயர்களும் இலக்கங்கள் கொண்ட அட்டவனைத்தொகுப்பு அறிவறுத்தல்கள் என்பன குறிப்பிடத்தக்கதும் புகழத்தக்கதுமான நூலக ஒழுங்கமைப்புக்கள் நூலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. நூலகம் அறிவை வளர்க்கும் கலைக்கூடமாகும். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு படிக்கிறோமோ அந்த அளவிற்கு எமது அறிவு வளர்கிறது. இவ்வளர்ச்சிக்கு முதுகெலும்பாகதிகழ்வது நூலகமே. "நூலளவேஆகுமாம் நுண்ணறிவு"என்ற ஔவையாரின் கூற்றிற்கு ஏற்ப அறிவைப் பெருக்கிக் கொள்ள களமாக அமைவது நூலகமே.

ஆவணப்படுத்தல் பேணிப்பாதுகாத்தல் மூலமாக தற்போதய தலைமுறையினருக்கான அறிவுப் பணியை செவ்வனேசெய்து வருகின்றபணியில் நூலகம் பெரும் பங்காற்றுகின்றது. புத்தகம் ஓர் பொய்கை மனமதில் நீராடி தூய்மைஅடைகின்றது. புத்தகம் ஒருதேன்கூடு ஆயிரமாயிரம் பூக்களின் தேன் அதில் சேகர்க்கப்பட்டுள்ளது. புத்தகம் ஒரு உயிர் அதில் நம் முன்னோர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புத்தகம் ஒருகண்ணாடி அதைப்பார்த்து நம் மனதை அறிந்து கொள்ளலாம். வாழ்க்கையை அர்தமுள்ளதாகமாற்ற பலதுறைகளிலும் சான்றோர்களது சுயசரிதைகளை சாதித்தவர்களின் சுயசரிதைகளை மாணவர்கள் வாசிக்க நூலகம் உறுதுணையாக உள்ளது. மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் ஆர்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுவதற்கும் புத்தகக் கடை புத்தககண்காட்சி போன்றவற்றிற்கு மாணவர்களை அழைத்துச் செல்லப்படவேண்டியது அவசியமானதாகும்.

அறிவுப்புக்கள், லேபிள்கள், கட்டளைகள், காலஅட்டவனைகள், பூகோளபடங்கள், ரெலிபோன்

புத்தகங்கள் என்பனவும் நூலகத்தில் சேமிக்கப்படவேண்டியவையாகும். தொடக்கபள்ளிமுதல் பல்கலைக்கழகம் வரைபயிலும் ஆசிரியர்கள், மாணவர்கள் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர்கள் நூலகத்தை தமது அறிவுத்தேடலுக்கு பயன்படுத்திவருகின்றனர். எனவே நாமும் நூலகத்தின் தரமறிந்து நூல் பலகற்று எமது அறிவை வளர்த்து பயன்பெறுவோம்.

திருமதி. வ.குமாரலிங்கம்
ஆசிரியர்

## சிந்தனைத் துளிகள்

- பதவியை விரும்புபவர்கள் மக்களுக்காக வாழ்வதில்லை

  -மகாத்மா காந்தி
- தாமரையால் உருண்டோடும் பனித்துளி போன்றது மனித வாழ்க்கை

  -தாகூர்
- வேலையில்லாமல் சும்மா இருந்தால் தனித்திராதீர்.தனித்திருக்க நேரில் சும்மா இராதீர்

  -ஜோன்சன்
- தான்சிறந்த அறிவாளியென எண்ணுபவன் முட்டாள் மட்டுமல்ல மற்றவருக்கு துன்பம் கொடுப்பவனும் கூட

  -டைரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை

- நடத்துனர் - எங்கேபோகனும்? …..டிக்கட் எடுங்கம்மா.
- பயணி - பின்னால் மீசைவைச்சிருப்பவர் எடுப்பார்.
- நடத்துனர் - எல்லோருமே முன்னால தான் மீசை வைச்சிருப்பாங்க பின்னால எப்படி?

- மனைவி – என்னங்க உங்கபிரண்டுக்கு பார்த்த பொண்ணு வடிவில்லாதவ என்று நீங்களாவது சொல்லக்கூடாதா?
- கணவன் - ஏன்சொல்லனும் . அவன்மட்டும் எனக்குசென்னானா?

- மனைவி – என்னங்க எவனோ பின்னாடி இருந்துஎன் காலில் உதையிறாங்க.
- கணவன் - பின்னாடி திரும்பி உன்முகத்தை கொஞ்சம் காட்டு உதைகிறவன் நெஞ்சுவெடிச்சு சாகட்டும்.

- ஆசிரியர் - இருந்தாலும் உங்கபையனுக்கு ரொம்பவும் குறும்பு அதிகம்.
- தந்தை - என்னசார் என்னசெய்தான்.
- ஆசிரியர் - காடுகளின் பயன் பற்றி எழுதுன்னு சொன்னா வீரப்பன் ஒழிந்து கொள்ளவும் போர் வீரப்படைகள் விருந்து படைத்து சாப்பிடவும் ஏற்ற இடம் என்று எழுதி இருக்கான்.

காக்கா என்னதான் கறுப்பா இருந்தாலும் அதுபோடுற முட்டை வெள்ளைதானே. முட்டை என்னதான் வெள்ளையா இருந்தாலும் அதுக்குள்ள இருக்கிற காக்கா கறுப்புத்தானே.

ஜெ.ஜவன்ஜா(தரம் 13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்கள்

- 1ஆவது - காகிதவிழா
- 2ஆவது - பருத்திவிழா
- 3ஆவது - தோல்விழா
- 4ஆவது - பூவிழா
- 5ஆவது - மரவிழா
- 6ஆவது - இரும்புவிழா
- 7ஆவது - செம்புவிழா
- 8ஆவது - வெண்கலவிழா
- 9ஆவது - மண்கலசவிழா
- 10ஆவது - தகரவிழா
- 11ஆவது - எ.்.துவிழா
- 12ஆவது - வினன் விழா
- 13ஆவது - பின்னல் விழா
- 14ஆவது – தத்தவிழா
- 15ஆவது – படிகவிழா
- 20ஆவது – பீங்கான் விழா
- 25ஆவது – வெள்ளிவிழா
- 30ஆவது - முத்துவிழா
- 40ஆவது - மாணிக்கவிழா
- 45ஆவது - இரத்தினவிழா
- 50ஆவது - பொன்விழா
- 55ஆவது - மகரவிழா
- 60ஆவது - வைரவிழா/மணிவிழா
- 75ஆவது - பவளவிழா
- 80ஆவது - அமுதவிழா
- 100ஆவது - சகாப்தவிழா

ச.திலக்சனா
தரம் 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் அழகுகள்

- சுருங்கச் சொல்லல்
- விளங்க வைத்தல்
- படிப்போர்க்கினிமை
- நல்ல சொற்களை அமைத்தல்
- **இனிய ஓசையுடமை**
- ஆழமடைத்தாதல்
- பொருட்களை முறையுடன் அமைத்தல்
- உயர்ந்தோர்வழக்கத்துடன் மாறுபடாமை
- சிறந்த பொருளுடைத்தாதல்
- விளக்கமாய் உதாரணங்களை கையாளுதல்

தன்னம்பிக்கை உள்ள
மனிதனுக்கு எப்போதும் ரோஜா
தான் கண்ணில் தெரியும் முட்கள்
தெரியாது.
– மெலிடிக்கன்ஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் பற்றி அறிஞர்களின் கருத்து

ஆசிரியர் என்பவர் ஒருஆலோசகர். நிபுணர் நற்பண்புகளைப் போதிப்பவர் நல்லொழுக்கம் பேணுபவர்

ஓ.ஏ.டயிஸர்

பிள்ளைகளின் சிந்தனையை எழுச்சி பெறச்செய்பவர் கற்றல் முறைகளைதிட்டமிட்டு செயற்படுத்துபவர்.

முயிகல்ஸ்மித் மூவர்

ஒருநாட்டின் எந்தத் தரமும் அந்தநாட்டின் ஆசிரியர்களின் தரத்தை விடமேலானாது அல்ல.

இந்தியதேசியகல்விஆனைக் குழு

ஆசிரியர் சமூகத்தின் பிரதிநிதி நல்லொழுக்கத்தை வளர்ப்பவர் ஒருநீதிபதி ஒரு மதிப்பீட்டாளர் முன்மாதிரியான ஒருவர் ஒருநண்பன் ஒருநம்பிக்கையாளர்

எரிக்றொயின்

கற்றலை நிறுத்திய ஆசிரியர் கற்பித்தலையும் நிறுத்தவேண்டும்.

மகாத்மாகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சமூதாயத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவர் அவர் ஒருசொல்வளம் ஒருநீதிபதி ஒருஉதவியாளர் தீர்மானம் எடுப்பவர் இரகசியப் பரிசோதகர். ஒரு குழுத்தலைவர் பெற்றோர்களுக்காகசெயற்படுபவர் நல்லநண்பர்.

றெட்ஸ் வெற்றன் பாக்

## நன்னூல் குறிப்பிடும் நூல் குற்றங்கள்

- கூறியது கூறல்
- மாறுபட்டுக் கூறல்
- குறைபடக் கூறல்
- மிகைப்படக் கூறல்
- பொருளில்லாமல் கூறல்
- மயங்கக் கூறல்
- இனிமையில்லாது கூறல்
- இழி சொற்களால் புனைந்து கூறல்
- ஆதாரமின்றி தானே ஒரு பொருளை படைத்தும் கூறல்
- எவ்வாறாயினும் படிப்போர் மனங்கொள்ளாதவாறு கூறல்

**முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்களில் கவனம் செலுத்துங்கள்

- புத்தகத்தை அதிகமாக பிரிக்காதீர்கள்.
- பிரித்த படியே கவிழ்து வைக்காதீர்.
- மூலைகளை மடிக்காதீர்.
- தலையணையாக வைத்துக் கொள்ளாதீர்.
- வீசியெறியாதீர்.
- விசிறியாகப் பாவியாதீர்.
- இன்னொருவர் மீதோ, நிலத்திலோ அடியாதீர்.
- சிறு குழந்தைகளிடம் கொடாதீர்.
- குறிப்புக்கள் கோடுகள் இடாதீர்.
- அழுக்கான ஈரமான கரங்களோடு தொடாதீர்.

## அறியவேண்டியவை

வருவதும் போவதும் - இன்பம்,துன்பம்
வந்தால் போகாதது – புகழ்,பழி
போனால் வராதது - மானம்,உயிர்
தனாகவருவது - இளமை,மூப்பு
நம்முடன் வருவது - பாவம்,புண்ணியம்
அழிவைத்தருவது - பொறாமை,கோபம்
நம்மால் பிரிக்க முடியாதது - பந்தம்,பாசம்
தவிர்க்க முடியாதது – பசி,தாகம்
அடக்க முடியாதது – ஆசை,துக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பதனால் ஏற்படும் பயன்கள்

- வாசிப்பு என்பது ஓர் மனிதனுக்கு அத்தியாவசியமானதாகும்.
- வாசிப்பை வளர்ப்பதற்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், புதினத்தாள்கள், நூலகம் என்பன உதவிபுரிகின்றன.
- வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான்.
- வாசிப்பதனால் மனிதன் பல்வேறு ஆற்றல் திறனை பெறுகின்றான்.
- வாசிப்பதனால் ஒரு மனிதன் நுண்ணறிவு உள்ளவனாக மாறுகின்றான்.
- ஒருவன் தொடர்ந்தும் வாசிப்பானெனின் அவர் சிறந்த வாசிப்புத் திறன் உள்ளவனாக மாறுகின்றான்.
- வாசிப்பதனால் மனிதன் எதிர்காலத்தில் வாசிப்பு சம்மந்தமான தொழில்களில் வேலைவாய்ப்புப் பெறுகின்றான்.
- வாசிப்பதனால் மனிதன் பிறரை அறிகின்றான்.
- வாசிப்பதனால் ஒரு மனிதன் தன்னை அறிகின்றான்.
- வாசிப்பதனால் மனிதன் பல புதிய புதிய கருத்துக்களை அறிகின்றான்.
- வாசிப்பதனால் ஒருவன் சொற்பிழையின்றி வாசிப்பவனாக மாற்றப்படுகின்றான்.
- வாசிப்பதனால் மனிதன் உலகத்தையும், உலகத்தில் நடைபெறும் விடயங்களையும் அறிகின்றான்.
- வாசிப்பதனால் ஒருவன் பரீட்சையை சிறந்த முறையில் எதிர்நோக்கக் கூடியவனாக மாற்றப்படுகின்றான்.
- வாசிப்பு ஒரு மனிதனை அறியச் செய்வதோடு கலைகளிலும் பல்வேறு துறைகளிலும் ஈடுபடச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாசிப்பு என்பது மனிதனுக்கு முக்கியம். மாணவப் பருவம் முதல் வாசிப்பில் ஈடுபட்டு எதிர்காலத்தில் சிறந்த பிரஜையாக வருவோம்.

## வகுப்பறையில் ஆசிரியர் கையாள வேண்டிய உபாயங்களும் நுட்பங்களும்

- முதலில் மாணவர் தொடர்பை கடுமையான முறையில் உருவாக்குதல் பின்பு எளிமையாக்கிக் கொள்ளலாம்.
- வகுப்பில் மாணவருடன் உரையாடுவதன் முன் சிறிது மௌனமாக இருத்தல்.
- வகுப்பினுள் மாணவர் எதேச்சையாக நுழைவதைக் கட்டுப்படுத்தல்.
- மாணவர் பெயர்களை அறிந்து பயன்படுத்தல்.
- பாடங்களை சிறப்பாக தயார் செய்து தெளிவான முறையில் கட்டமைப்புக்கு உட்படுத்தல்.
- மாணவர் வருவதற்கு முன்பே வகுப்பறைக்குச் செல்லல்.
- பரிசோதனைகள், செய்முறைகள் என்பவற்றை வகுப்பில் மேற்கொள்ள முன்பே ஆசிரியர் செய்து பார்த்தல்.
- வகுப்பில் ஒரே இடத்தில் நிற்காது சிறிது நடந்து கற்பித்தல்.
- தெளிவான அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- தொனிக்கட்டுப்பாட்டைக் கற்றுக் கொள்ளல்.
- கற்பித்தலுக்காகப் பேசும் போது வகுப்பை நேராக அதாவது கண்கள் ஊடாக ஊடுருவிப்பார்க்க கற்றுக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வினைத்திறன் மிக்க வினாவுதல் நுட்பத்தைக் கற்றுக் கொள்ளல்.
- தரப்படும் பாடவேளையில் கற்பித்தலை நிறைவு செய்வதற்கேற்றவாறு நேரமுகாமைத்துவத்தைப் பின்பற்றல்.
- தேவைக்கேற்றவாறு கற்பித்தல் நுட்பங்களை மாற்றியமைத்தல்.
- ஒழுங்கு தொடர்பான மாணவர் பிரச்சனைகளுக்கு விரைவாக அதனைத் தீர்க்கும் வகையில் செயற்படுதல்.
- மாணவருக்குத் தண்டனை வழங்குவதாயின் உறுதியாதனதாகவும், ஒரேமாதிரியானதாகவும் இருத்தல்.
- வகுப்பறையில் மாணவருடன் முரண்படுவதைத் தவிர்த்தல்.
- மாணவருக்கு உதவி செய்பவர், வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பவர் ஆசிரியர் என்பதை வெளிப்படுத்தல்.
- மாணவரின் தேவைக்கு ஏற்ற விதத்தில் அவர்கள் விரும்பிய வகையில் இயங்குவதற்கு இடமளிக்காது பொறுப்புடையவர்களாக நடந்து கொள்ளச் செய்தல்.
- ஆக்கபூர்வமான வகையில் நகைச்சுவை உணர்வை பயன்படுத்தல்.
- (Wragg) என்பவர் தமது மாணவ ஆசிரியர்களிடமிருந்து கண்டறிந்த உபாயங்களும் நுட்பங்களும் இவை.

ஆதாரம்

ஆசிரிய முகாமைத்துவம்

மா. சின்னத்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களின் பார்வையில் எமது நூலகம்

18.09.2013

நூலகச் செயற்பாடுகள் யாவும் முன்னேற்றகரமானவையாக முன்னெடுக்கப்படுகின்றன. இவ் வகையில் ஆசிரியர் மிகவும் பாராட்டுக்குரியவர். மேலும் ஒத்துழைப்பு வழங்கிவரும் மாணவர்கட்கும் பாராட்டுக்கள். நூலகச் செயற்பாடுகள் மென்மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.

அதிபர்

அ.இரங்கநாதன்

01.09.2013

நூல் நிலையத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் வாசகர்களைக் கவரும் முறையில் காணப்படுகின்றது. வாசிக்கும் அமைதியான சூழல் பேணப்படுவது போற்றத் தக்கது. இம்மாற்றத்தின் பலன்களை சகலரும் பெறவேண்டும் என்பதே எமது அவா.

இந் நூலகத்தின் உதவியுடன் மாணவரின் அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ளும் வகையிலான பல ஆக்கங்கள் காணப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மக்கள் வங்கி (பண்டத்தரிப்பு)

செல்வன். T. வெங்கடேஸ்வரன்

செல்வன். M. சுலக்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.10.2013

நூலகத்தில் உள்ள நூலக செயற்பாடுகள் யாவும் எமக்கு பயனள்ள முறையில் காணப்படுகிறது. இதற்கு எமது ஆசிரியர் சி. ஜனகா அவர்களுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றன்.

செ. பிரதீபன்

தரம் 12 (2015 A/L)

15.10.2013

நூலகத்திற்கு வருவதை விரும்பாத எங்களை கட்டாயப்படுத்தாது நாங்களாகவே வருவதற்கு இந்த நூலகம் எமக்கு உதவுகின்றது. இதற்காகப் பாடுபடுகின்ற ஆசிரியர் சி.ஜனகா அவர்கட்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. காலேப்

தரம் 11

18.09.2013

கல்வி கற்பது முக்கியமாக நூல்கள் வாசிப்பது என்றாலே விரும்பாத என்னை சிறுபிள்ளைகளுக்கு Ice cream கொடுத்து வரவேற்பது போல தினமும் இங்கு வரவைப்பதற்காக சிறந்த முறையிலான நூலகத்தை அமைத்துள்ள எமது பாடசாலை ஆசிரியருக்கு மனமார்ந்த நன்றிகள்.

A.அன்ரன்ஜோசுவா
தரம்- 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28.10.2013

எமது பாடசாலையில் நூலகத்தின் புதிய ஒழுங்கமைப்பும் தோற்றமும் மாற்றங்களும் என்னை மகிழ்ச்சியடையச் செய்கின்றது. நூலொன்றை கையில் எடுத்த பின் தான் வாசிக்க ஆரம்பிக்கலாம் என்றில்லாது நூலகவாயினுள் நுழைகின்ற நொடிப் பொழுது முதல் எல்லோரும் வாசிக்க ஆரம்பிக்கும் வகையில் தகவல் காட்சிப்படுத்தல் மிகச் சிறப்பாக உள்ளது. தெளிவான நூல் ஒழுங்கமைப்பு முறை தேடலுக்கு இலகுவாக உள்ளது. நூலகத்திற்கு வருவதற்கான ஆரம்பம் மாணவர்களிடையே மிக அதிகமாக உள்ளமையையும் காணமுடிகிற அதே வேளை அவர்களது வாசிப்பு திறனும் அறிவும் இதனால் வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லை. இவை அனைத்திற்கும் காரணமான எமது ஆசிரியை திருமதி. சி.ஜனகா அவர்களை நான் பாராட்டுவதோடு நன்றிகளையும் கூறுகின்றேன்.

Mrs.E.S.Antanyraja

ஆசிரியர்.

- தேவையற்ற வேலைகள் எம்மைக் களைப்படையச் செய்கின்றன.தேவையான வேலைகள் எம்மை மகிழ்விக்கின்றன.
- யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக் கொள் . பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org